Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

Y.M.C.A

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

## மண்ணெண்ணெய் கலப்படம்; காவல்துறை எச்சரிக்கை

மண்ணெண்ணெய் வர்த்தகர்கள் சிலர் கலப்படம் செய்து விற்பதாக பொது மக்கள் காவல்துறைக்கு புகார் செய்த வண்ணம் உள்ளனர். எனவே மக்களின் நலனைக்கருதி இவ்வாறான செயலில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தமிழீழ காவல் துறையினர் எச்சரிக்கை செய்துள்ளனர். இதுகுறித்து நேற்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: தற்போதைய போராட்ட சூழ்நிலையில் சிங்கள அரசானது தமிழீழ மக்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கை களில் ஈடுபட்டு வருவதை உலகம் நன்கறியும். [4 ஆம் பக்கம் பார்க்க]

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    சித்திரை 14    [27-04-93]    செவ்வாய்க்கிழமை    ஓசை 68

# நெருக்கடியான நிலையில் பிரேமதாசா அரசு

# பதவி விலகுமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை

## மக்கள் சீற்றம் அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலியின் கொலையைத் தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கத்திற்குப் பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. லலித்தின் கொலைக்கு ஜனாதிபதி பிரேமதாசாவே காரணமென எதிர்க்கட்சிகள் ஒருமித்த குரலில் குற்றம் சாட்டுவதும் இதனை சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக்கொள்வதோடு அரசிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் செய்யத் தொடங்கியுள்ளமையுமே இவ்வாறான நெருக்கடி நிலை உருவாவதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு லலித்தின் கொலைக்கு பொறுப்பேற்று ஜனாதிபதி பிரேமதாசா பதவி விலகவேண்டும் என எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

லலித்தின் கொலையில் தமக்கும் தனது கட்சிக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்ற ஜனாதிபதியின் கூற்றை சிங்களவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த லட்சக் கணக்கில் கூடும் சிங்களவர்கள் அரசிற்கெதிரான கோசங்களை எழுப்பியவாறும் பதவிவிலகக் கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, எதிர்க்கட்சியினரும் ஒரே குரலில் லலித் கொலைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனக் குற்றம் சாட்டியுள்ளமையும் சேர்ந்து பிரேமதாசா அரசை பெரும் நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது.

இதே வேளை, இதுவரை கொழும்பில் மட்டும் இடம் பெற்றுவந்த அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தற்பொழுது வெளிமாவட்டங்களிலும்பரவி வருகின்றமையானது அரசாங்கத்திற்கு மேலும் நெருக்குதல்களைத் தோற்றுவித்துள்ளது.

## பொலிஸ் மா அதிபரை பதவிவிலகக் கோரிக்கை

சிறிலங்கா ஜனாதிபதிபிரேமதாசா பதவி விலக வேண்டும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவர் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய

துலத்முதலிக்கு பாதுகாப்பு வழங்கத் தவறியமைக்காக பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவும், பாதுகாப்பிற்கு பொறுப்பானவர் என்ற முறையில் பிரேமதாசாவும் பதவி விலகவேண்டும் என அவர்

## அஞ்சலிக்கு அனுமதிக்குமாறு பிரேமதாசா வேண்டுகோள்

(கொழும்பு)

கொல்லப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த சந்தர்ப்பம் அளிக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பொதுமக்களிடமும் அத்துலத்

மும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ந்தும்அரசாங்ககட்சி உறுப்பினர்களும் அரசாங்க உயர் அதிகாரிகளும் மக்களால் தாக்கப்படுவதை அடுத்து அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரி

## இனக்கலவரத்தை தூண்ட அரசாங்கம் முயற்சி

### பிரேமச்சந்திரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆத்திரமும், துயரமும் கொண்ட மக்களிடையே இனவாதத்தைத் தூண்டி இனக்கலவரத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

லலித் அத்துலத் முதலியை விடுதலைப் புலிகளே கொன்றனர் என கூறுவதன் மூலம் இனக்கலவரத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிசெய்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; தமிழ் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டதாக கூறுவதன் மூலம் இதனைச் சாதித்து குறுகிய அரசியல் இலாபத்தை பெற அரசாங்கம் முயல்கிறது. மக்கள் அரசாங்கத்தின் இத் தவறான பிரசாரத்திற்கு

யானவர்களினதும்முகமூடியை கிழித்தெறிய வேண்டும் என்றார்.

வெள்ளவத்தையில் செவ்வாயன்று (இன்று) நடைபெறும் ஐ. தே. கவின் மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாசா உரையாற்ற இருக்கிறார் என்றும் இக் கூட்டத்தைக் களமாக பயன்படுத்தி ஜனாதிபதி பிரேமதாசா இனக்கலவரத்தைத் தூண்டலாம் என தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த அவர் இதன் மூலம் மாகாணசபை தேர்தலை ஒத்திவைப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் தெரிவித்தார்.

## தேர்தலை ஒத்திவைக்க அரசு பிரயத்தனம்

(கொழும்பு]

லலித் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் காரணம் காட்டி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பதாக ஜ. ஐ. தே. முன்னணியின் உப தலைவர் காமினி திசாநா

அரசுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார். அத்துடன் நாட்டில் வன்முறை பரவும் எனக் காரணம்காட்டி லலித் பற்றிய செய்திகளுக்கு அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன

னத் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு லலித்தின் கொலைக்கு பொறுப்பேற்று ஜனாதிபதி பிரேமதாசா பதவி விலகவேண்டும் என எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

லலித்தின் கொலையில் தமக்கும் தனது கட்சிக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்ற ஜனாதிபதியின் கூற்றை சிங்களவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த லட்சக் கணக்கில் கூடும் சிங்களவர்கள் அரசிற்கெதிரான கோசங்களை எழுப்பியவாறும் பதவிவிலகக் கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, எதிர்க்கட்சியினரும் ஒரே குரலில் லலித் கொலைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனக் குற்றம் சாட்டியுள்ளமையும் சேர்ந்து பிரேமதாசா அரசை பெரும் நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது.

இதேவேளை, இதுவரை கொழும்பில் மட்டும் இடம் பெற்றுவந்த அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தற்பொழுது வெளிமாவட்டங்களிலும்பரவி வருகின்றமையானது அரசாங்கத்திற்கு மேலும் நெருக்குதல்களைத் தோற்றுவித்துள்ளது.

## பொலிஸ் மா அதிபரை பதவிவிலகக் கோரிக்கை

சிறிலங்கா ஜனாதிபதிபிரேமதாசா பதவி விலக வேண்டும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவர் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் அத்துலத்முதலிக்கு பாதுகாப்பு வழங்கத் தவறியமைக்காக பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவும், பாதுகாப்பிற்கு பொறுப்பானவர் என்ற முறையில் பிரேமதாசாவும் பதவி விலகவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## அஞ்சலிக்கு அனுமதிக்குமாறு பிரேமதாசா வேண்டுகோள்

(கொழும்பு)

கொல்லப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த சந்தர்ப்பம் அளிக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பொதுமக்களிடமும் அத்துலத் முதலியின் குடும்பத்தினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ந்தும்அரசாங்ககட்சி உறுப்பினர்களும் அரசாங்க உயர் அதிகாரிகளும் மக்களால் தாக்கப்படுவதை அடுத்து அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொண்ட மக்களிடையே இனவாதத்தைத் தூண்டி இனக் கலவரத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

லலித் அத்துலத் முதலியை விடுதலைப் புலிகளே கொன்றனர் என கூறுவதன் மூலம் இனக்கலவரத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிசெய்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; தமிழ் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டதாக கூறுவதன் மூலம் இதனைச் சாதித்து குறுகிய அரசியல் இலாபத்தை பெற அரசாங்கம் முயல்கிறது. மக்கள் அரசாங்கத்தின் இத் தவறான பிரசாரத்திற்கு இரையாகக் கூடாது. அமைதியாக இருந்து கொலையாளியினதும் கொலைக்கு உடந்தை

சடலத்திற்றுரியவர்

றார்.

வெள்ளவத்தையில் செவ்வாயன்று (இன்று) நடைபெறும் ஐ. தே. கவின் மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாசா உரையாற்ற இருக்கிறார் என்றும் இக் கூட்டத்

இனக்கலவரத்தைத் தூண்டலாம் என தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த அவர் இதன் மூலம் மாகாணசபை தேர்தலை ஒத்திவைப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் தெரிவித்தார்.

# தேர்தலை ஒத்திவைக்க அரசு பிரயத்தனம்

(கொழும்பு]

லலித் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் காரணம் காட்டி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பதாக ஐ. ஐ. தே. முன்னணியின் உப தலைவர் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தேர்தலைத் தள்ளிவைக்க அரசுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார். அத்துடன் நாட்டில் வன்முறை பரவும் எனக் காரணம்காட்டி லலித் பற்றிய செய்திகளுக்கு அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அரசின் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

# பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த ஜனாதிபதிக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

கொலைசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த சிறிலங்கா ஜனாதிபதிபிரேமதாசாவிற்கு லலித்தின் குடும்ப உறவினர்கள் அனுமதி மறுத்துள்ளனர்.

பிரேமதாசா லலித்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த வந்தால் ஆத்திரமுற்றிருக்கும் மக்கள் தாக்குதல்களில் ஈடுபடலாம் என்றும் அவர்களைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியமாகிவிடும் என்றும், லலித்தின் குடும்ப உறவினர்கள் கூறியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன தானும் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் வருவதாகக் கூறியபோதும், பிரேமதாசாவின் வருகையினால் அசம்பாவிதங்கள் நேரலாம் என்றும் குடும்ப உறவினர்கள் தெரிவித்துள்ளனர். கட்டுக்கடங்காத மக்கள் கூட்டத்தினால் பிரேமதாசா மீது தாக்குதல் நடாத்தப்படலாம் என்றும் லலித்தின் குடும்ப உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஜெனரல் சிறில்ரணதுங்கா பின்கதவால் ஓட்டம்

(கொழும்பு)

லலித்தின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காகவும் இறுதி அஞ்சலி நிகழ்ச்சிக்குபாதுகாப்புவழங்குவது தொடர்பாக பேசவும் சென்ற முன்னாள் இராணுவ தளபதியும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான சிறில் ரணதுங்க உட்பட மற்றும் பல அரசாங்க உயர் அதிகாரிகள் பிரேமதாசா அரசிற்கு ஆதரவான பௌத்த மதகுருமார் ஆகியோர் லலித்தின் ஆதரவாளர்களால் கடுமையாகதாக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவங்களையடுத்து இவர்கள் லலித்தின் வீட்டின் பின்புற வாசல் வழியாக தப்பியோட நேரிட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆயிரக் கணக்கில் லலித் ஆதரவாளர்கள் கொழும்பு நோக்கி வருகை கொண்டிருப்பதாகவும், இப் படுகொலையின் பின்னால் அரசு இருப்பதாக அவர்கள் நம்புவதாகவும் ஏஜென்சி செய்திகள் கூறுகின்றன. இதனால் இறுதி ஊர்வலம் நடக்கவிருக்கும் நாளைய தினத்தில் அரசுக்கு எதிரான வன்முறைக் கலகங்கள் வெடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசாங்க கட்சியினர் மீது சிங்களவர் தாக்கு

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு நேற்று இறுதி அஞ்சலி செலுத்த வந்த அரசாங்கக் கட்சி அரசியல் வாதிகள் சிலர் பொதுமக்களின் தாக்குதலுக்கு இலக்காகினர். மேலும் சிலர் பொதுமக்களால் கேலி செய்யப்பட்டு விரட்டப்பட்டனர். அரசாங்க உயர் அதிகாரிகள் சிலரும் அரசாங்கக்கட்சி மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள் சிலரும் அஞ்சலி செலுத்தச் செல்லவிடாது மக்களால் தடுக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை லலித்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த வரும் அரசாங்கசார்பு அரசியல் வாதிகள், அதிகாரிகளுக்கு தம்மால் பாதுகாப்பு வழங்க முடியாது என அத்துலத் முதலியின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இக்கொலைக்கு அரசாங்கம் முழுப்பொறுப்பு என மக்கள் கருதுவதால் ஆத்திரமுற்றுள்ள மக்களைக் கட்டுப்படுத்துவது தம்மால் இயலாதகாரியம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## பொலிசாரின் பாதுகாப்பு எமக்குத் தேவையில்லை

--காமினி

லலித் அத்துலத் முதலியின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளுக்கு பொலிசார் பாதுகாப்பு வழங்கத் தேவையில்லை என்றும், இராணுவத்தினர் தான் இறுதிச் சடங்கிற்கு பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உபதலைவர் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர் மாநாடொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில் இந்தக் கொலைச் செயலுக்கு அரசுதான் காரணம் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மேலும் லலித் பேசிய பொதுக் கூட்டத்திற்கு பாதுகாப்பு வழங்க பொலிசாரிடம்கோரிய போதும் பொலிசார் பின்நின்றதாகவும் இப் படுகொலையின் பின்னால் பெரிய சதி ஒன்றேஇருப்பதாகவும் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

## அஞ்சலி செலுத்த பொலிசாருக்குத் தடை

(கொழும்பு)

லலித்தின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த பொலிசாருக்கு மக்கள் தடை விதித்துள்ளனர். இக்கொலைக்கு அரசாங்கத்துடன் சேர்ந்து பொலிசாரும் உடந்தையாக இருந்தமையால் அவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தக் கூடாது என அவர்கள் தடுத்துள்ளனர்.

இதேவேளை கடற்படையினரும், இராணுவத்தினரும் அஞ்சலி செலுத்த மக்கள் அனுமதித்ததாகவும் இதனையடுத்துபெருமளவுகடற்படை. இராணுவத்தினர் இறுதி அஞ்சலி செலுத்திவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தமிழரா, சிங்களவரா? இனம் காண்பதில் சிக்கல்

[கொழும்பு]

லலித் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இந்தப் பேச்சுக்களின்போது லலித் கொலைச் சம்பவத்தின் பின்னர் கண்டெடுக்கப்பட்ட சடலம்தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது உயிரிழந்த இளைஞர் தமிழரா அல்லது சிங்களவரா என்பதை தெளிவுபடுத்த பொலிஸ்மா அதிபர் சந்தேகம் தெரிவித்ததார். சடலத்தில் காணப்பட்ட நபரின் தோற்றத்திற்கும், அடையாள அட்டைப் புகைப்படத்திற்கும் வேறுபாடு இருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் இந்தச் சந்திப்பின் போது கூறியுள்ளார்.

## மீட்பு நிதி சேகரிப்பு

நாளை புதன்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசிமகாவித்தியாலயத்தில் மாலை 3 மணி தொடக்கம் 4 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் தமது மீட்புநிதிக் கடனை இக் குறித்த நாளில் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## ஸ்கொட்லன்யாட் கொழும்பு வந்தது

[கொழும்பு]

ஸ்கொட்லன்ட்யாட் புலனாய்வுத்துறை அதிகாரிகள் நால்வர் நேற்றுக் காலை கொழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## லலித் கொலை தொடர்பாக 30 பேர் மீது விசாரணை

(கொழும்பு)

லலித் கொலை குறித்து நடைபெறும் விசாரணைகளில் இதுவரை 30 பேர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் இரகசியப் பொலிசார் தெரிவித்தனர். இவர்களில் நால்வரின் வாக்குமூலங்கள் தமது விசாரணையைத் தொடர பெரிதும் உதவும் என தாம் நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

லலித் கொலை தொடர்பாக விசாரணைகளை நாம் பல கோணங்களில் மேற்கொண்டு வருகின்றோம் என்றும் இரகசியப் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

## அடையாள அட்டை தொடர்பான

# பொலிஸ் அறிவிப்பை வாபஸ் பெறக் கோரிக்கை

லலித் கொலைச் சம்பவம் தொடர்பாக பொலிசாரினால் விடுக்கப்பட்ட அறிக்கை தவறானதாக இருப்பதால் அதனை மீளப்பெறுமாறு எதிர்க்கட்சிகள் பொலிஸ் திணைக்களத்தை கோரியுள்ளன.

லலித் படுகொலைச் சம்பவத்தை அடுத்து பொலிசார் ஏற்கனவே விடுத்த அறிக்கைகளால் சிங்களவருக்கும், தமிழருக்கும் இடையே மேலும் பல மோதல்கள், கலவரங்கள் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டே முன்னைய அறிக்கைகளை மறுத்து அறிக்கை வெளியிட வேண்டும் என்று அவை பொலிஸ் திணைக்களத்தைக் கோரியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இறந்து கிடந்த இளைஞனின் சடலத்துக்கு அருகே கிடந்த அடையாள அட்டை போலியானது என நிரூபிக்கப்பட்டிருப்பதால், அதனை அரசசார்பு பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன மூலம் முக்கி

[ 4 ஆம் பக்கம் பார்க்க]

# ஆயுதம் தாங்கிய கோஷ்டி எதிரணியினர் மீது மிரட்டல்

(பதுளை)

அரசியல் கட்சி ஒன்றைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று கல உட, நாரங்கலப் பகுதிகளில் இரவு நேரங்களில் நடமாடி எதிர்க் கட்சிகளின் ஆதரவாளர்களை பயமுறுத்திவருவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பதுளை மாவட்ட வேட்பாளர் எச்.எம். ஏ. லத்தீப் பதுளைக் கச்சேரியில் நடைபெற்ற மாநாட்டில் தெவித்தார்.

பதுளை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சட்டரீதியான அறிவுரைகள் வழங்கும் முகமாக இம்மாநாட்டை ஊவா மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா ஏற்பாடு செய்திருந்தார்.

பதுளைப் பொலிஸ் அத்தியட்சகர் எல்பிரட் விஜேவர்தனா, பண்டாரவளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே. பத்மநாதன் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இது தொடர்பாக விளக்கமளித்து பண்டாரவளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பத்மநாதன் உரையாற்றுகையில்;

''ஆயுதமேந்திய கோஷ்டி நடமாடினால் உடனே பொலிசாரிடம் முறையீடுசெய்யப்பட வேண்டும். தேர்தல் ஒன்றுக்குப் போட்டியிடும் ஒரு வேட்பாளர் எத்தகைய பொறுப்பான நிலைமைகளுக்கும் தயாராக இருக்கவேண்டும் உயிருக்கு ஆபத்து ஏற்படுமென்று பயமடையக்கூடாது'' என்றார்

மேலும் அவசரகாலச்சட்ட விதிகளை அகற்றியுள்ளபோதிலும் ஊர்வலம்செல்ல, போஸ்டர் பெனர் போன்றவற்றை பயன்படுத்தவோ, கூட்டம் நடாத்தவோ இடம் அளிக்கப் படமாட்டாது

## விமானம் நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா அரசின் விமானப்படையினதுவேவுவிமானம் ஒன்று நேற்றுமுன் தினம்காலை 8 15 மணியளவில் அராலி, வட்டுக்கோட்டை, மூளாய், தொல்புரம், சித்தன்கேணி, சங்கானை ஆகிய பகுதிகளின் மேல் தாழப்பறந்து மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது. (41)

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டங்களும், பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும்.

இளவாலை யங்கென்றியன் வி க. வை எதிர்த்து ஏழாலை ஞானகலா வி. க.வும், பாசையூர் சென் அன்ரனிஸ் வி. க. வை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிசும் மோதுகின்றன.

பயிலுனர் பட்டதாரி ஆசிரியர்

## நிரந்தர நியமனத்திற்கான பரீட்சை முடிவுகள் வந்தன

பட்டதாரி பயிலுனர்களை நிரந்தர பட்டதாரி ஆசிரியர்களாக நியமிப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நல்லூர் தலைமைப் பணிமனையில் உள்ளது. இப் பட்டியல் வடக்கு கிழக்கு மாகாணகல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் தமது பெறுபேறுகளைப் பார்வையிட்டு தமது பதவியை நிரந்தரமாக்குவதற்காகச் சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகத்தின் ஊடாக மாகாண அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பிக்குமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவத்தின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது

## மகாபாரத சொற்பொழிவு

இணுவில் செகராஜசேகரப் பிள்ளையார் கோயில் மகோற்சவத்தை முன்னிட்டு மகாபாரத தொடர் சொற்பொழிவு குமாரசாமி சண்முகநாதன் என்பவரால் நடாத்தப்படுகின்றது.


## வரி விளம்பரம்

### கடவுள் சுவாமிகள் 88வது ஜயந்திவிழா

ஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 88 வது ஜயந்தி விழா நாளை புதன் கிழமை (28. 4 93) உடுவில் கிழக்கு-கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க நிலையத்தில் அவர்களது பக்தர்களால் வெகு விமரிசையாகக் கொண்டாடப் படும் (4766)

### தேவை

வைததியசாலையில் உதவியாளராக கடமையாற்றபெண் தேவை. தையல், வீட்டுப்பணியில் அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம். மெடிக்கல் வைத்தியசாலை, ஸ்ரேசன் றோட், சுன்னாகம் றெயில்வே கடவைக்கு அருகில் வைரவகோவில் முன்பாக. முடிவு திகதி 10-5-93. (4769)

### றேடியோ, கசற்றேடியோ கடிகாரங்கள்

சகல மணிக்கூடு வகைகள், எலெக்ரோனிக் கடிகாரங்கள். றேடியோக்கள், கசெற் றேடியோக்கள் யாவற்றையும் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள, டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகில்) கிளை; சாவகச்சேரி (இலங்கை வங்கி அருகில்) சகல மணிக்கூட்டு பற்றறிகளும் எம்மிடம்உண்டு. (சி-6508)

### சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ் பெஸ்கி சனசமூக நிலையத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு [24 - 04 - 1993] அன்று சனிக்கிழமை குலுக்கப் பட்டன. சீட்டிழுப்பின் முடிவுகள் :

1ஆம் பரிசு இல. 1030
2ஆம் பரிசு இல 1821
3ஆம் பரிசு இல. 2105

பரிசுக்குரியோர் சங்க நிர்வாகிகளிடம் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம். நிர்வாகிகள் (4770)

### நேர்முகப் பரீட்சை

மூன்று வருடம் பயிலுநர் ஆசிரியர்களாக யாழ் மாவட்டத்தில் கடமையாற்றுபவர்களும், இதுவரை காலமும யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வியைப் பயில வாய்ப்புக்கிடைக்காதவர்களும், அண்மையில் கொட்டகல கல்விக் கல்லூரியில் சேவைமுன் பயிற்


## ஆறாம் ஆண்டு நினைவாக..



மலர்வு: 18 — 01 — 1955 (யாழ்ப்பாணம்)

உதிர்வு: 27 — 04 — 1987 (இங்கிலாந்து)

செல்வி **தேவராணி கந்தையா**
(கட்டிடவரைபடக் கலைஞர் கட்டுப்பெத்தை வளாகம்)
28, வெலிங்டன் அடை வீதி, திருக்கோணமலை.

அன்பிலெழுந்து ஆடிய பூங்கொடி
அறுந்து விழுந்து ஆறாண்டுகள் ஆனதா?
கண்ணிலாடிய காவியத் திருமகள்
கண்மறைந்து ஆறாண்டுகள் ஆனதா?
விண்ணிடிந்து வீழ்ந்தது போலவே
விந்தையாயிரம் செய்த கலைமகள்
மண்ணைவிட்டு மறைந்து போகலாம்
மனதைவிட்டு எப்படி மறைவளோ?

அன்பின் நினைவில்
தந்தை, தாய்,
சகோதரர்கள்.
க. தயாளசிங்கம் குடும்பம் (பிரான்ஸ்)
க. நல்லலிங்கம் குடும்பம் (லண்டன்)
க. தேவகுலசிங்கம் குடும்பம் (திருக்கோணமலை)
க. வசந்தகுமார் (லண்டன்)
க. சோதிலிங்கம் (லண்டன்)
க, சற்குணதேவி (திருக்கோணமலை)
சிறியதாயார்
செல்வி சபாபதி தங்கப்பொன் (திருநெல்வேலி)
மற்றும் உறவினர், நண்பர்கள்.
[4763]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## விளையாட்டு அபிவிருத்திக்கு ஒரு கோடி நிதி ஒதுக்கீடு

வடக்குக் கிழக்கில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சினால் ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடக்குக் கிழக்கு மாகாண விளையாட்டமைச்சின் பணிப்பாளர் திரு. சூ. மரியதாஸ் அவர்கள் கடந்த சனிககிழமை குருநகர் பாடுமீன் விளையாட்டரங்கில் நடைபெற்ற யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு இறுதி உதைபந்தாட்டப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

இப் போட்டி யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. க. குணராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அங்கு அவர் உரையாற்றும் போது; சுமார் ஐந்து லட்சம் ரூபாவுக்கு விளையாட்டு உபகரணங்கள் வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு யாழ். மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்படும். இவைகள் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவினால் கழகங்களுக்கு பயன்படுத்த உகவி செய்யப் படும். மேலும் 1992இல் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவுக்கு வழங்க என ஒரு லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் யாழ். மாவட்டத்துக்கு அனுப்பி வைப்பதில் அரசினால் சில தடைகள் உருவாகியுள்ளபோதிலும் வெகுவிரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். சிங்கள அதிகாரிகள் வடக்குக் கிழக்கில் விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுவருவதை அறிந்து மிகுந்த ஆச்சரியப்படுகிறார்கள். அவர்கள் இப்பகுதிகளில் போர் மட்டும்தான் இடம்பெறுகிறது என நினைக்கிறார்கள். எனவே இந்த விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள் மாகாண மட்டத்தில் தமது திறமையைக் காட்ட முன்வந்து தென்பகுதியில் உள்ளவர்களின் மனோநிலையை மாற்றியமைக்க முன்வரவேண்டும் என்றார். [71]

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும்

## உதைபந்தாட்டப்போட்டி இறுதியாட்டங்களும்

## நினைவு கூருகின்றோம்... 1993-04-27

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

அர்ச்சுனா (பொன்னுத்துரை மித்திரா - சின்ன உப்போடை - மட்டு.)

லெப். கபில் (இரா. பாலேந்திரன் - திருமலை)

கப்டன் அலெக்ஸ் (கந்தசாமி நித்தியானந்தன்- இல 33, நித்தியானந்தன் வீதி, நல்லூர் - வடக்கு-யாழ்.)

2-ம் லெப். ரங்கா (சிங்காரவடி வல் இராசகுமார்- நெற்கொழு ஒழுங்கை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை - யாழ்.)

2-ம் லெப். துரைக்குட்டி (சிவகுருநாதன் இராசவடிவேல் - சிவகுரு வித்தியாசாலை வீதி, வல்வெட்டித்துறை - யாழ்.)

நளினன் [சச்சிதானந்தம் பிரதாபன்- நவாலி, மானிப்பாய் - யாழ்.)

கார்த்திக் (நடராஜா கார்த்திகேசு - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை - யாழ்.)

தெய்வா [ஐயாத்துரை சிவநாதன் - மாதகல் - யாழ்.)

காந்தன் (சிவசுந்தரம் விஜயதாஸ் - கடற்கரை வீதி, வல்வெட்டித்துறை - யாழ்.)

யேசு (பத்மநாதபிள்ளை ரவீந்திரா - முனிவைரவர் கோயிலடி, அளவெட்டி -யாழ்.)

1987ஆம் ஆண்டு யாழ் - கோட்டைப் பகுதியில் காவல்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

ராஜன் (ஆறுமுகம் ரட்ணராஜா - ஒட்டுமடம் - யாழ்)

1988ஆம் ஆண்டு திருமலை - மூதூர் கட்டைபறிச்சான் பகுதியில் 'ஜிகாத்' குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

கலீல் (கலீல் ரகுமான் - தோப்பூர் - திருமலை)

கரவெட்டி கப்பூது வெளியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர்.

கப்டன் மோகன் மாஸ்ரர் (முருகேசு ஜெயக்குமார் சோழங்கன், கரணவாய் தெற்கு- கரவெட்டி - யாழ்.)

சீட்டிழுப்பு [24 - 04 - 1993] அன்று சனிக்கிழமை குலுக்கப்பட்டன. சீட்டிழுப்பின் முடிவுகள்:

1ஆம் பரிசு இல. 1030
2ஆம் பரிசு இல. 1821
3ஆம் பரிசு இல. 2105

பரிசுக்குரியவர் சங்க நிர்வாகிகளிடம் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம். நிர்வாகிகள் (4770)

## நேர்முகப் பரீட்சை

மூன்று வருடம் பயிலுநர் ஆசிரியர்களாக யாழ் மாவட்டத்தில் கடமையாற்றுபவர்களும், இதுவரை காலமும யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வியைப் பயில வாய்ப்புக்கிடைக்காதவர்களும், அண்மையில் கொட்டகல கல்விக் கல்லூரியில் சேவைமுன் பயிற்சியைப் பெற்று பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களுமான ஆசிரியர்கள் தேசிய கல்வி நிறுவனமும் யாழ் கல்வித்திணைக்களமும் இணைந்து நடாத்த உள்ளபட்டப்பின் படிப்பு பயிற்சி நெறியில் கலந்து கொள்ள முடியும் என தேசிய கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 27, 28, 29 30 ஆகியதினங்களில் யாழ் பிரதேச கல்வித் திணைக்களத்தில் நடாத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது இவர்கள் தமது கல்விச்சான்றிதழ் நியமனக் கடிதங்களுடன் தோற்றுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். [17]

## சித்தவைத்திய கண்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிரதேச உள்ளூராட்சித் திணைக்களத்தினர் 1993ஆம் ஆண்டுக்கான ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், ஆயுர்வேத சித்த வைத்தியத் துறைக் கண்காட்சி ஒன்றை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் எதிர் வரும் ஜூன் மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடாத்துவதெனத் தீர்மானித்துள்ளார்கள்.

இம் மாபெரும் கண்காட்சி ஈழத்து அறிஞர்களும், படைப்பாளிகளும் எமது மொழியின் வளத்துக்கும், வளர்ச்சிக்கும், வனப்புக்கும் இதுவரையில் ஆற்றியுள்ள மகத்தான பணிகளைத் தமிழ் மக்கள் மதிப்பீடு செய்து ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பெறுவதற்கே ஒழுங்கு செய்திருப்பதாக யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார். (24)

கணமறைந்து ஆறாண்டுகள் ஆனதா?
விண்ணடிந்து வீழ்ந்தது போலவே
விந்தையாயிரம் செய்த கலைமகள்
மண்ணைவிட்டு மறைந்து போகலாம்
மனதைவிட்டு எப்படி மறைவளோ?

அன்பின் நினைவில்
தந்தை, தாய்,
சகோதரர்கள்.

க. தயாளசிங்கம் குடும்பம் (பிரான்ஸ்)
க. நல்லலிங்கம் குடும்பம் (லண்டன்)
க. தேவகுலசிங்கம் குடும்பம் (திருக்கோணமலை)
க. வசந்தகுமார் (லண்டன்)
க. சோதிலிங்கம் (லண்டன்)
க. சற்குணதேவி (திருக்கோணமலை)
சிறிய தாயார்
செல்வி சபாபதி தங்கப்பொன் (திருநெல்வேலி)
மற்றும் உறவினர், நண்பர்கள்.
[4763]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு:
27-01-1972

வீரச்சாவு:
08-04-1992

## லெப்டினன்ட் புலித்தேவன்/ பார்த்தீபன்

(முருகேசபிள்ளை சிதம்பரேஸ்வரன்)

விமன்காமம் நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்

திதி: 27-04-1993

பொங்கு பாசத்தின் விளைவே
எங்கள் புதல்வா சிதம்பரேஸ்வரா
தங்கத் தமிழீழம் தந்த தனயா
சங்கை லெப்டினன்ட் புலித்தேவா
மண்ணில் எவரும் வியக்க மாவீரனாய்
விண்ணில் மங்காத சோதியாய்
ஆண்டுவொன்று ஓடி மறைந்திடினும்
உன் அன்புப் பிணைப்பு இறுக்குதையா
யுகமது சென்றிடினும்
உயர் தமிழீழத்தின் துயர் துடைத்து
வெற்றிக்கொடி உலகினில் பறக்கச் செய்தனையே
நீயும் நின் தோழரும்
பொன்வரலாற்று ஏட்டில்
பொலிந்து விளங்கி நீவீர்
தமிழீழக் காவியம் பாடி
நன்கு மகிழ்வீரே.

27-04 1993 இன்று உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் எமது இல்லத்திற்கு வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுவடக்கு,
டச்சவீதி
சித்தன்கேணி.

- குடும்பத்தினர்.
(6497)

பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

இப் போட்டி யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. க. குணராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அங்கு அவர் உரையாற்றும் போது; சுமார் ஐந்து லட்சம் ரூபாவுக்கு விளையாட்டு உபகரணங்கள் வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு யாழ் மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்படும். இவ்வவை ... கப்படும். சிங்கள அதிகாரிகள் வடக்குக் கிழக்கில் விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுவருவதை அறிந்து மிகுந்த ஆச்சரியப்படுகிறார்கள். அவர்கள் இப்பகுதிகளில் போர் மட்டும்தான் இடம்பெறுகிறது என நினைக்கிறார்கள். எனவே இங்கு விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள் மாகாண மட்டத்தில் தமது திறமையைக் காட்ட முன்வந்து தென்பகுதியில் உள்ளவர்களின் மனோநிலையை மாற்றியமைக்க முன்வரவேண்டும் என்றார். [71]

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும்

## உதைபந்தாட்டப்போட்டி இறுதியாட்டங்களும் பரிசளிப்பு விழாவும்

இடம்: கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானம் பி.ப 3.00 மணி

காலம்: 27-4-93 செவ்வாய்க்கிழமை

1] யங்கென்றியன் வி.க. இளவாலை எதிர் ஞானகலா வி. க. ஏழாலை

2] சென் அன்ரனீஸ் வி. க. பாசையூர் எதிர் சென்மேரிஸ் வி. க. நாவாந்துறை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசம்: 5/- நிர்வாகம் (சி/6506)

## 5-ம் ஆண்டு நினைவலைகள்

வீரப்பிறப்பு:
08
—
05
—
1962



வீரச்சாவு:
27
—
04
—
1988

## கப்டன் மோகன் மாஸ்டர்

[முருகேசு ஜெயக்குமார்]

(முன்னாள் நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர்)

மண்ணின் விடுதலைக்காய் மரணித்த மோகன்மாஸ்டரே
எண்ணில் உன்றன் தற்கொடை முன் கடலும் சிறிது;
காற்றும்; பரந்த விண்வெளியும் சிறிதேதான்;
'பெண்ணாம் பெரிதாய்' விரியும் உன் ஈகம்
உன்றனுக்கு எங்கள் இதயத்து அஞ்சலிகள்.

இவருடன் வீரச்சாவடைந்த லெப். முரளி, பட்சம் ஆகியோருக்கு எமது வீரவணக்கங்கள்.

''மோகன் மாஸ்டர் வீதி''
கோழங்கன்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

- குடும்பத்தினர்
(4753)

கார்த்திக் (நடராஜா கார்த்திகேசு - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை - யாழ்.)

தெய்வா [ஐயாத்துரை சிவநாதன் - மாதகல் - யாழ்.)

காந்தன் (சிவசுந்தரம் விஜயதாஸ் - கடற்கரை வீதி, வல்வெட்டித்துறை - யாழ்.)

யேசு (பத்மநாதபிள்ளை ரவீந்திரா - முனிவரவர் கோவிலடி, அளவெட்டி - யாழ்.)

1987ஆம் ஆண்டு யாழ் - கோட்டைப் பகுதியில் காவல்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

ராஜன் (ஆறுமுகம் ரட்ணராஜா - ஒட்டுமடம் - யாழ்)

1988ஆம் ஆண்டு திருமலை - மூதூர் கட்டைபறிச்சான் பகுதியில் 'ஜிகாத்' குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

கலீல் (கலீல் ரகுமான் - தோப்பூர் - திருமலை)

கரவெட்டி கப்பூது வெளியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர்.

கப்டன் மோகன் மாஸ்ரர் (முருகேசு ஜெயக்குமார் கோழங்கன், கரணவாய் தெற்கு - கரவெட்டி - யாழ்.)

2-ம் லெப். முரளி/சாள்ஸ் (கந்தவனம் தவக்குமார் - கப்பூது, கரணவாய் தெற்கு, கரவெட்டி - யாழ்.)

பட்சம்/ஜவாகர் (கதிர்காமநாதன் இராகவன் - கரவெட்டி மேற்கு, கரவெட்டி - யாழ்)

1991ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கிருபா (கனகசுந்தரம் ரவிச்சந்திரன் - முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

சுருளி [விநாயகமூர்த்தி கந்தலிங்கம் - வற்றாப்பளை, முள்ளிவாய்க்கால், முள்ளியவளை, முல்லைத்தீவு]

கப்டன் றொசான் (மாசிலாமணி சேகர் - கிளிநொச்சி)

கிங்ஸ்லி (பேரம்பலம் பாஸ்கரன் - 10/5 வீட்டுத்திட்டம், இரணைமடு, கிளிநொச்சி)

திலகன் (ஆறுமுகம் காமராஜி - பொன்நகர், முருகண்டி - கிளிநொச்சி)

பீற்றர் (குணரட்ணம் மோகன்ராஜ் - பூவரசுகுளம், விநாயகபுரம் - துணுக்காய்)

புவி (நடராசா சிவலோகநாதன் - தென்னியங்குளம் - துணுக்காய்)

கருணா (சரவணன் சந்திரகுமார் - திருநகர் வடக்கு, பரந்தன் - கிளிநொச்சி)

சர்மா/சல்மன் [சுப்பையா மனோகரன் - செல்வநகர் - கிளிநொச்சி]

தியாகு [பெருமாள் அரிச்சந்திரன் - கண்ணகிபுரம், ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி]

வேதா [ஆறுமுகம் ஞானச்சந்திரன் - கோணாங்குளம், கண்டாவளை - பரந்தன்]

இராமதாஸ் [செல்லையா பாலசுப்பிரமணியம் - பொன்நகர், முறிகண்டி - கிளிநொச்சி]

எட்வேட் [தங்கவேல் கனகசுந்தரம் - உருத்திரபுரம் - கிளிநொச்சி]

முகிலன் [இராமு குகநாதன் - 6-ம் கட்டை, அம்பாள்புரம் - மாங்குளம்]

போல் [முருகையா உதயகுமார் - இத்தாவில் - பளை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/6505]

சிந்தனைக்கு

அரசியல்வாதி தான் சொல்வதை தானே ஒரு போதும் நம்பாததால் மற்றவர்கள் நம்பும்போது வியப்படைகிறான்.

- சார்ல் தி கோல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## மிருகவதையும் ஐ. தே. கவும்

மூன்றாம் உலக நாடுகளின் பெரும்பாலான அரசியல் வாதிகள் தாம் விரும்பிய எதையும் பேசலாம், எப்படியும் பேசலாம், யாரையும் பேசலாம் மக்கள் அதைக் கேட்டே ஆக வேண்டும் என்ற ரீதியில் செயற்படுகின்றவர்கள். இதே போன்றே லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பாக திரு. பிரேமதாசாவின் பேச்சும் உள்ளது.

லலித் அத்துலத் முதலியின் கொலையில் பிரேமதாசாவிற்கு பங்கு உண்டா? இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும். ஆனால், ஜனாதிபதி பிரேமதாசா ''மனிதனைப் படுகொலை செய்வதில் தமது கட்சிக்கு நம்பிக்கையில்லை எனினும் மக்கள் தம்மைச் சந்தேகிப்பது கவலையளிப்பதாக உள்ளது'' என்றும், ''எமதுகட்சி மனிதக்கொலைகளை மட்டுமல்ல மிருகங்களின் கொலைகளைக் கூட வன்மையாகக் கண்டிக்கின்றது'' எனக் கூறியுள்ளமைதான் வேடிக்கையானதாகவுள்ளது.

பிரேமதாசாவின் இப்பேச்சானது இலங்கையின் அரசியல் வரலாற்றை இரத்தக்கறை படிந்ததாக ஆக்கி விட்ட ஐக்கிய தேசியக் கட்சியினதும், அக்கட்சியின் தலைவர்களினதும் வரலாற்றை மூடி மறைக்கும் ஒரு செயலாகும். ஆனால் அது அவ்வளவு சுலபமான காரியமாக இருந்து விடப் போவதில்லை. முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் புதைக்கும் ஒரு நடவடிக்கையாகவே இது அமையும்.

பூனை கண்ணை மூடிக் கொண்டு உலகமே இருண்டு விட்டதாகக் எண்ணிக் கொள்ளலாம். ஆனால் உலகம் கண்ணை மூடிக்கொண்டிருக்கவில்லை. திரு. பிரேமதாசா தன்னையும், தனது கட்சியையும் இரத்தக்கறை படியாத புனிதமான கட்சி எனவும், தன்னைப் போதிசத்துவர் எனவும் கூறிக் கொள்ளலாம். ஆனால், அவராலும், அவரது கட்சியாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள், அதனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் என இலங்கையில் பல மில்லியன் மக்கள் உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொல்லாமைக் கொள்கை பற்றிப் பேசும் பிரேமதாசா, அவரது பதவிக் காலத்தில் தலைவர்கள் தொடக்கம் தொண்டர்கள் வரையிலான 60,000- 1,00,000க்கும் இடைப்பட்ட ஜே. வி. பி. உறுப்பினர்களைக் கொன்றொழித்ததை எந்த வகையில் சேர்த்துக் கொண்டுள்ளார் என்பதைப் புரிய முடியவில்லை.

# வடக்கு - கிழக்கு இணைப்பை கிழக்கு மக்களே தீர்மானிக்கவேண்டும்

### தனது கடைசி செய்தியாளர் மாநாட்டில் லலித்

(கொழும்பு)

''13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட மாகாண சபை அதிகார பரவலாக்கலை நாம் ஆதரிக்கின்றோம். ஆனால் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்திருக்க வேண்டுமா அல்லது பிரிந்திருக்க வேண்டுமாஎன்பதைகிழக்குமாகாண மக்களே தீர்மானிக்க வேண்டும்'' இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட லலித் அத்துலத் முதலி தாம் கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவரின் ஜ.ஐ.தே.மு கட்சி தலைமை அலுவலகத்தில் நடந்த இந்த செய்தியாளர் மாநாட்டில் நிருபர்களின்கேள்விகளுக்கு பதிலளித்த லலித் ''இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் படி வடக்கும் - கிழக்கும் இணைந்திருக்க வேண்டுமா அல்லது பிரிந்திருக்க வேண்டுமா என்பதை தீர்மானிக்க கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என குறிப்பிடப் பட்டுள்ளது. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்பதை கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

''இலவச சீருடை, பாடசாலை மாணவர் மதிய உணவுத்திட்டம், ஆடைத்தொழிற்சாலை, ஜனசக்திபோன்றவை தொடர்பாக ரூபவாஹினியில் அடிக்கடி ஒளிபரப்பி ஐ தே.க. பிரசாரம் நடத்துகின்றது. இதை நாம் தேர்தல் ஆணையாளர் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். ஆளும் கட்சியின் யானைச் சின்னத்தை கொண்ட வர்த்தக விளம்பரம் தொடர்ந்து தொலைக்காட்சியில் காண்பிக்கப்படுகின்றது. ஆனால் எமது கட்சியின் சின்னத்தை கொண்ட வர்த்தக விளம்பரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கூறிய லலித் மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த போது 'தேர்தல் ஆணையாளரில் நாம் சந்தேகத்திற்கிடமின்றி நம்பிக்கைகொண்டுள்ளோம்'' என்றார்.

### சேமிப்புப் புத்தகம் விநியோகம்

வடமராட்சி கிழக்கில் அம்பன் கிராமத்தில் சர்வோதய நிறுவனத்தின் கடனுதவியைப் பெற்றுக் கொண்ட 30 விவசாயக் குடும்பங்களின் 30 பிள்ளைகளுக்கு சர்வோதய வடமராட்சி பிரிவினரால் தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை கிளையில் சேமிப்புக் கணக்கு திறக்கப்பட்டுள்ளது. சேமிப்புப் புத்தகங்கள் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை அம்பன் அரசினர் தமிழ்ப் பாடசாலையில் வைத்து வைபவ ரீதியாக வழங்கப் படும்.

## தனது 'சடலத்தை' தானே அனுப்பிய சிப்பாய்

(கொழும்பு)

இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்ட இராணுவ வீரர் ஒருவர் உயிருடன் வீடு திரும்பிய சம்பவம் பொலநறுவையில் நடந்துள்ளது.

ஏப்ரல் 9ஆம் திகதி வெலிஓயாவில்புலிகள்மேற்கொண்ட தாக்குதலில் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 10ஆம் திகதி சிதைந்த உடல்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. சடலம்ஒன்று பொலநறுவைகல்தம்பரவகிராமத்துக்கும் அனுப்பிவைக்கப் பட்டது. உடலை உறவினர் அடக்கம் செய்த பிறகு இறந்தவர் என்று கருதப்பட்டவர் தான் உயிரோடு இருப்பதாக தாயாருக்கு கடிதம் எழுதினார்.

தாயார் வெலி ஓயா இராணுவ முகாமுக்குச் சென்று தனது மகனை வீட்டுக்கு அழைத்து வந்தார்.

'இறந்தவரின் சடலத்தை' வீட்டுக்கு அனுப்புவதற்காகச் செத்தவராகக் கருதப்பட்ட இராணுவ வீரரே வாகனத்தில் ஏற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

## லொறி மீது குண்டுவீச்சு சிப்பாய் கைது

[கொழும்பு]

நெல் ஏற்றிக் கொண்டு வந்த லொறி ஒன்றுக்கு காட்டினுள் மறைந்திருந்து இனந்தெரியாத நபர்கள் குண்டு வீசி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் ஐந்துபேர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

இச்சம்பவம் புத்தம என்ற இடத்தில் இடம்பெற்றது. இதனால் காயங்களுக்குள்ளான இருவர் பதுளை பெரியாஸ்பத்திரியிலும், மூவர் மொனராகலை மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளின்போது' எறியப்பட்ட குண்டு இராணுவமுகாமிலிருந்து திருடப்பட்டதாகவும், இராணுவத்திலிருந்து தப்பியோடிய முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## உச்ச நீதிமன்ற தீர்ப்பு அரசால் புறக்கணிப்பு

(கொழும்பு)

விடுதலை செய்யும்படி உச்ச நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்ட பூஸா தடுப்பு முகாம் கைதி விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

31-3-93இல் விடுதலைசெய்யும்படி உச்ச நீதி மன்றம் 13-10-92இல் ஆணை பிறப்பித்திருந்தும் இன்றுவரை என்னை பூஸா முகாமில் தடுத்து வைத்திருக்கிறார்கள்'' இவ்வாறு பூஸா தடுப்புமுகாம் ...தும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பலரிடமிருந்து தமக்கு இவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சட்ட உதவிப் பிரிவுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### கருத்துக் கூற மறுப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாப் ஷெரீப் பதவி கவிழ்க்கப்பட்டது குறித்து ...

# கொலை,பாலியல் வன்முறை; ராணுவ சிப்பாய் கைது

### கசிப்பு காய்ச்சிய தாயாரும் கைது

(கல்கிசை)

இராணுவ சேவையில் இருந்து கொண்டே பல கொள்ளைகள், பாலியல்வன்முறைகளில் ஈடுபட்டதாக கூறப்படும் இராணுவ சிப்பாய் ஒருவரை கல்கிசை பொலிசார் கைது செய்துள்ளனர்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்ட 22 வயதான இவர் கடைசியாக கடந்த சில நாட்களுக்கு முன் பூநகரி இராணுவ முகாமில் கடமைபுரிந்தவர் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மகிந்தபால என்ற பொய்ப் பெயருடன் இவர் நடமாடி வந்ததாகவும் இராணுவ அல்லது தேசிய அடையாள அட்டைகள் எதுவுமின்றிசமாதான நீதவான் ஒருவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டபுகைப்படத்துடன் மாத்திரம் இவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர். இதே வேளை இவரது புகைப்படத்தை உறுதிப்படுத்திவழங்கிய சட்டத்தரணி தலைமறைவாகி விட்டதாகவும் இவரை பொலிசார்தேடிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி முகாமுக்குச் செல்லுமுன் வெலிஓயா இராணுவ முகாமிலும் இவர் சிலகாலம் இருந்துவிட்டு சிறிது காலம் தலைமறைவாகி இருந்துள்ளார்.

கடந்த சனி இரவு கல்கிசை பிரதம இன்ஸ்பெக்டர் எஸ். சாந்திகுமார் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இவரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றபோது அங்கு இவரது தாயார் ஏற்கனவே கசிப்பு விற்ற குற்றத்திற்காக தடுத்துவைக்கப்பட்டிருந்தாராம். தாயும் மகனும் ஒருவரை ஒருவர் தெரிந்தவர்கள்போல் பொலிசாருக்கு அங்கு காட்டிக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளுக்கு ஆயுதம் வழங்கி அரசு சாதனைசெய்துள்ளது

### அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

''இன்றைய அரசு சாதித்த பெரும்சாதனை இந்தஉலகவரலாற்றில் இடம்பெற்றுள்ளது. அதாவது அரசிற்கெதிராகப் போராடிவரும் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதே இந்தப் பெருமை. இந்த உண்மைகளை நாம் எடுத்துக்கூறும் போது எம்மை அரசு துரோகிகள் என வர்ணிக்கின்றது. ஆனால் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டியது ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களுடைய பொறுப்பாகும்''.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளரும் கம்பஹா மாவட்ட எம்.பியுமான அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். கட்சியின் கடந்த 17 வருட ஆட்சியில் கொலை, கொள்ளை, லஞ்சம் தான் அதிகரித்துள்ளன. வசதி படைத்தவர்களின் வாழ்க்கை மேலும் வசதியடைந்துள்ளது.

1988ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பிரேமதாசா மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்தார். அதில் முக்கியமானது ஜனசவியத் திட்டம். இத்திட்டத்தின் கீழ் 20 இலட்சம் மக்களுக்கு ஜனசவிய உதவிகள் கிடைக்குமென வாக்குறுதி அளிக்கப்பட்டது ஆனால் இதுவரை 3 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் மட்டுமே பயனடைந்துள்ளனர். வடக்குத் ...

### பொருள்கள் திருட்டு

...

போவதில்லை. முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் புதைக்கும் ஒரு நடவடிக்கையாகவே இது அமையும்.

பூனை கண்ணை மூடிக் கொண்டு உலகமே இருண்டு விட்டதாகக் எண்ணிக் கொள்ளலாம். ஆனால் உலகம் கண்ணை மூடிக்கொண்டிருக்கவில்லை. திரு. பிரேமதாசா தன்னையும், தனது கட்சியையும் இரத்தக்கறை படியாத புனிதமான கட்சி எனவும், தன்னைப் போதிசத்துவர் எனவும் கூறிக் கொள்ளலாம். ஆனால், அவராலும், அவரது கட்சியாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள், அதனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் என இலங்கையில் பல மில்லியன் மக்கள் உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொல்லாமைக் கொள்கை பற்றிப் பேசும் பிரேமதாசா, அவரது பதவிக் காலத்தில் தலைவர்கள் தொடக்கம் தொண்டர்கள் வரையிலான 60,000-1.00,000க்கும் இடைப்பட்ட ஜே. வி. பி. உறுப்பினர்களைக் கொன்றொழித்ததை எந்த வகையில் சேர்த்துக் கொண்டுள்ளார் என்பதைப் புரிய முடியவில்லை. மிருகங்களையே நேசிக்கும் கட்சி தனது கட்சி எனக் கூறும் பிரேமதாசா இவர்களை மிருகங்களை விடக் கீழானவை எனக் கருதுகின்றாரோ? அவ்வாறானால் தமிழரின் தேசிய இனப்போராட்டத்திற்கு எதிராக அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு 40.000க்கு மேற்பட்ட அப்பாவி தமிழ்மக்களைக் கொன்றொழித்ததை எந்த வகையில் சேர்ப்பது?

இவற்றிற்கு அப்பால் ஜனநாயக ரீதியாக மோதமுற்பட்ட சில அரசியல் எதிரிகளை ஐக்கிய தேசியக் கட்சியும், சிலரை பிரேமதாசாவும் ஒழித்துக் கட்டி விட்டதாகவும் பேசப்படும் பேச்சுக்களுக்கு அவர் கூறும் பதில் என்ன? இஸ்ரேலுக்கும் - ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் இடையிலான உறவை அடுத்த பாராளுமன்றக் கூட்டத் தொடரில் ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவேன் எனக் கூறிவிட்டுச் சென்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் சரத் முத்தட்டுவேகம அடுத்தமுறைபாராளுமன்றத்திற்கு வரவே இல்லை. அவர் 'விபத்தில்' கொல்லப்பட்டதாகத் தகவல். ஆனால் மக்கள் அதை ஏற்கவில்லை.

சிறிலங்காவின் ஜனாதிபதிப்பதவியை துச்சமாக மதிப்பிட்ட உபாலி விஜயவர்த்தனா தென்கிழக்கு ஆசியாவிற்குச் சென்று திரும்பிய போது அவர் தனது சொந்த ஜெட்விமானத்துடனேயே காணாமற்போய்விட்டார். இது குறித்து அவரது அரசியல் எதிரியாக கருதப்பட்ட பிரேமதாசாவையே மக்கள் சந்தேகிக்கின்றார்கள். இச்சந்தேகத்தை அவரால் நீக்கமுடிந்ததா? இதைவிட வேறும் சில சந்தேகங்கள் மக்களிடம் உண்டு.

இவ்வாறாக, இலங்கை அரசியலையே ரணகளமாக்கிய ஐக்கிய தேசியக் கட்சியும், அதன்தலைவர்களும் மிருகங்கள் தொடர்பான தமது கட்சியின் காருண்யம் பற்றி பேசுவதை மக்கள் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். அல்லது மக்கள் தம்மீது சந்தேகப்படுகின்றார்கள் என ஆதங்கப்படுகின்றார்கள். ஆனால், உண்மையில், தனது மடியில் கனமில்லை என்றால், திரு. பிரேமதாசா ஏன் அஞ்ச வேண்டும்? கவலைப் பட வேண்டும்? இவையாவற்றிற்கும் சவாலாக முன்னாள் டி. ஐ ஜி. உடுகம்பொல வைத்திருக்கும் குற்றச்சாட்டுக்களையாவது சவாலாக ஏற்று நியாயமான விசாரணை ஒன்றிற்கு உத்தரவிடலாமே.

# புலிகளுக்கு ஆயுதம் வழங்கி அரசு சாதனைசெய்துள்ளது

## அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

''இன்றைய அரசு சாதித்த பெரும்சாதனை இந்தஉலகவரலாற்றில் இடம்பெற்றுள்ளது. அதாவது அரசிற்கெதிராகப் போராடிவரும் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதே இந்தப் பெருமை. இந்த உண்மைகளை நாம் எடுத்துக்கூறும் போது எம்மை அரசு துரோகிகள் என வர்ணிக்கின்றது. ஆனால் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டியது ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களுடைய பொறுப்பாகும்''.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளரும் கம்பஹா மாவட்ட எம்.பியுமான அநுராபண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் மாகாணசபைத் தேர்தல் முக்கிய இடத்தினைவகிக்கின்றது. இந்தத் தேர்தலில் நாம் வெற்றியீட்டினால் ஐ. தே. க. ஜனாதிபதி பொதுத்தேர்தல்களில் வெற்றிபெற முடியாதென்பது உறுதியாகும். நாம் ஐ. தே. கட்சியின் ஆட்சியை நீடிக்கவிட்டால் சகல இன மக்களும் மேலும்பல துயரங்களை அனுபவிக்க நேரிடும். ஐ. தே. கட்சியின் கடந்த 17 வருட ஆட்சியில் கொலை, கொள்ளை, லஞ்சம் தான் அதிகரித்துள்ளன. வசதி படைத்தவர்களின் வாழ்க்கை மேலும் வசதியடைந்துள்ளது.

1988ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பிரேமதாசா மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்தார். அதில் முக்கியமானது ஜனசவியத் திட்டம். இத்திட்டத்தின் கீழ் 20 இலட்சம் மக்களுக்கு ஜனசவிய உதவிகள் கிடைக்குமென வாக்குறுதி அளிக்கப்பட்டது ஆனால் இதுவரை 3 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் மட்டுமே பயனடைந்துள்ளனர். வடக்குக் கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஏனோ இந்த அரசுக்கு அக்கறை இல்லை. மாதாந்தம் 300 இலட்சம் பணம் விரயம் செய்யப்படுகின்றது, ஆயிரக்கணக்கான உயிர்கள் இதுவரை பலியாகியுள்ளன. இந்த நிலை நீடிக்குமானால் எமது பொருளாதாரம் என்னவாகும் என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

விக்கப்படுகிறது.

பூநகரி முகாமுக்குச் செல்லுமுன் வெலிஓயா இராணுவ முகாமிலும் இவர் சிலகாலம் இருந்துவிட்டு சிறிது காலம் தலைமறைவாகி இருந்துள்ளார்.

கடந்த சனி இரவு கல்கிசை பிரதம இன்ஸ்பெக்டர் எஸ். சாந்திகுமார் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இவரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றபோது அங்கு இவரது தாயார் ஏற்கனவே கசிப்பு விற்ற குற்றத்திற்காக தடுத்துவைக்கப்பட்டிருந்தாராம். தாயும் மகனும் ஒருவரை ஒருவர் தெரிந்தவர்கள்போல் பொலிசாருக்கு அங்கு காட்டிக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### பொருள்கள் திருட்டு

கட்டைப்பிராய்ப் பகுதியில் நள்ளிரவு வேளை மூன்று கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தின் போது ஒருமில், ஒரு மணிக்கூடு திருத்துமிடம், ஒரு புடைவை வியாபாரமும் பலசரக்குப் பொருள்களும் விற்பனை செய்யும் கடை என்பனவற்றிலேயே இத்திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

இச்சம்பவம் புத்தம என்ற இடத்தில் இடம்பெற்றது. இதனால் காயங்களுக்குள்ளான இருவர் பதுளை பெரியாஸ்பத்திரியிலும், மூவர் மொனராகலை மருத்துவ... வும், இராணுவத்திலிருந்து தப்பியோடிய முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

# உச்ச நீதிமன்ற தீர்ப்பு அரசால் புறக்கணிப்பு

(கொழும்பு)

விடுதலை செய்யும்படி உச்ச நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்ட பூஸா தடுப்பு முகாம் கைதி விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

31-3-93இல் விடுதலைசெய்யும்படி உச்ச நீதி மன்றம் 13-10-92இல் ஆணை பிறப்பித்திருந்தும் இன்றுவரை என்னை பூஸா முகாமில் தடுத்து வைத்திருக்கிறார்கள்'' இவ்வாறு பூஸா தடுப்புமுகாம் கைதி எச். கே. லயன்ஸ் சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவிப் பிரிவுக்கு இம் மாதம் 19ஆம் திகதி எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அடிப்படை உரிமை மீறல் வழக்கை விசாரித்த நீதி மன்றம் அவரை விடுதலை செய்யும்படி ஆணை பிறப்பித்திருந்தது.

உச்ச நீதி மன்றம் ஆணை பிறப்பித்திருந்தும் தொடர்ந்தும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பலரிடமிருந்து தமக்கு இவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சட்ட உதவிப் பிரிவுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### கருத்துக் கூற மறுப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாப் ஷெரீப் பதவி கவிழ்க்கப்பட்டது குறித்து கூறுவதற்கு ஏதுமில்லை என ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

ஷெரீப் ஆட்சி கலைக்கப்பட்டது தொடர்பாக பிரட்மனிடம் செய்தியாளர்கள் கருத்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அது பாகிஸ்தானின் உள்விவகாரம் என்பதே சிறிலங்காவின் நிலைப்பாடாகும் என அவர் கூறினார்.

# இந்தியப் படைகள் உஷாராக இருக்க உத்தரவு

## பாகிஸ்தான் நிலை குறித்து ராவ்

(டில்லி)

இந்தியா பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்துக் கொள்வதில் ஈடுபாடு காட்டும் அதேசமயம் முப்படைகளும் திடீரென இயங்கக் கூடிய நிலையில் இருக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்துள்ளார். இந்திய முப்படைகளைச் சேர்ந்த தளபதிகளிடையே பேசிய அவர் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் இந்திய பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கலாம் என்று குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் அமைதி ஏற்படும்வரை அமைதியான எதையும் நாம் எதிர்பார்க்க முடியாது என்று கூறிய ராவ், 1947இல் உபகண்டம் இரு நாடுகளாக பிரிந்தபின் இந்தியாவும் பாகிஸ்தானும் மூன்று போரை சந்தித்ததையும் நினைவு கூர்ந்தார். இந்திய இராணுவம் பாகிஸ்தானில் ஏற்படும் மாற்றங்களை நுணுக்கமாக கண்காணிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களையிட்டு இந்தியா அதிருப்தி தெரிவித்த மறுதினம் முப்படைத்தளபதிகளை உள்ளடக்கிய கூட்டம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸ் உறுப்பினருக்கு புலிகளுடன் தொடர்பு

## எஸ். டி. சோமசுந்தரம் தெரிவிப்பு

தமிழ்நாட்டிலிருந்து டீசல் போன்ற எரிபொருள்களும் ஏனைய பொருள்களும் விடுதலைப்புலிகளால் கடத்தப்படுவதற்கு அ. இ. அ. தி. மு. க. உதவி வருவதாக காங்கிரஸ் தெரிவித்திருந்த குற்றச்சாட்டை அ. இ. அ தி மு க. துணைப் பொதுச் செயலாளரும், தமிழக வருவாய்த்துறை அமைச்சருமான எஸ். டி. சோமசுந்தரம் வன்மையாக மறுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில், விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பதாகக் கூறப்படும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்காகவே காங்கிரஸார் இத்தகைய குற்றச்சாட்டை சுமத்தி வருவதாகவும், பொதுமக்கள் மத்தியில் தவறான கருத்தை ஏற்படுத்த காங்கிரஸார் முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தமிழ்நாட்டின் கடலோரத்தில் காவல் படையினரின் கண்காணிப்பு தளர்த்தப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தகனத்தை தவிர்க்க வயோதிபர்கள் தற்கொலை

(பீக்கிங்)

கிழக்கு சீனாவில் இருபதிற்கு மேற்பட்ட சீன வயோதிபர்கள் ஒரே நாளில் தற்கொலை செய்துகொண்டனர். ஏப்ரல் முதலாம் திகதிக்குப் பின் இறக்கும் அனைவரும் புதைக்கப்பட மாட்டார்கள், தகனம் செய்யப்படுவர் என கிழக்கு சீனா ஜியாங்சூ மாகாண அதிகாரிகள் அறிவித்ததை தொடர்ந்து தாம் இறந்தபின் தகனம் செய்யப்படுவதை தடுக்கும்முகமாகவே இவ்வயோதிபர்கள் கடந்த மாத இறுதியில் கூட்டமாக தற்கொலை செய்துகொண்டனர்.

சீனாவில் பாரம்பரியமாக இறந்தவர்கள் புதைக்கப்பட்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால் ஏற்பட்ட இடநெருக்கடிகளை அடுத்தே அதிகாரிகள் இறந்தவர்களை தகனம் செய்யும் புதிய முடிவுக்கு வந்ததாக மக்கள்பொது பாதுகாப்பு செய்திகள் என்ற செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

# எவரெஸ்ட் உயரம் 6 அடி குறைவு!

(ஜெனீவா)

உலகின் அதி உயரமான இமைய மலையின் எவரெஸ்ட் சிகரம் ஏற்கனவே கூறப்பட்டதைவிட 6.7 அடி உயரம் குறைவாக இருப்பதாக விஞ்ஞானிகள் குழு ஒன்று அறிவித்துள்ளது.

முன்பு கருதப்பட்டதைப் போன்று எவரெஸ்ட்டின் உயரம் 29029. 3 அடி அல்ல என்றும் அதன் உண்மையான உயரம் 29022. 6 அடியே என்றும் பிரெஞ் - இத்தாலிய விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது.

நவீன செய்மதி லேசர் தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கொண்ட 133 இறாத்தல் உபகரணங்களுடன் எவரெஸ்ட்டை அளக்க 9 விஞ்ஞானிகள் அதன் உச்சியை அடைந்தனர். தங்களது புதிய அளவு துல்லியமானது என இத்தாலிய விஞ்ஞானி ஒருவர் கூறினார்.

ஈழநாதம்

# திருமலை நகரப் பகுதியில் பாரிய சுற்றிவளைப்பு

## முப்படையும் இணைந்து தேடுதல்

(திருமலை)

திருக்கோணமலை நகரப்பகுதியில் சிறிலங்கா முப்படையினரும் இணைந்து முகமூடிகளின் உதவியுடன் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதுடன் பலரைக்கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆயிரக்கணக்கான சிறிலங்கா இராணுவத்தினரும் கடற்படை மற்றும் விமானப்படையினரும் இணைந்து திருமலை நகரின் மடத்தடி, மத்தியவீதி, சிவன்கோயிலடி, சின்னக்கடை பிரதான வீதி. பெரியகடை ஆகிய பகுதிகளைத்திடீரென சுற்றி வளைத்தனர்.

வீடுகளில் தங்கியிருப்போரில் ஒருவரைத் தவிர ஏனையோர் அனைவரும் புனித சூசையப்பர்கல்லூரிக்கு செல்ல வேண்டுமென ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் சூசையப்பர் கோயிலை நோக்கிச் செல்லத் தொடங்கினர். அங்கு முகமூடி அணிந்த நபர்கள்முன்னிலையில் அனைத்துப் பொதுமக்களும் நிறுத்தப்பட்டு அடையாளம் காணப்பட்டனர். அதிகாலை ஆரம்பமான சோதனை நடவடிக்கை நண்பகல்வரை நீடித்ததாகவும் அதன்பின்னரே மக்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதன்போது பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## உடன் கூட்டுமாறு எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கொலைசெய்யப்பட்டமையையடுத்து நாடாளுமன்றம் உடனடியாக கூட்டப்பட்டு இது தொடர்பாக விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. இதே போன்ற கோரிக்கைகளை மற்றும் சில எதிர்க்கட்சிகளும் கோரியுள்ளன.

பாராளுமன்றக் கூட்டத் தொடர் தற்போது ஒத்திவைக்கப்பட்டிருப்பதும், மாகாணசபைத் தேர்தல்களுக்குப்பின்னரே மீண்டும் சபை கூடுவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டு இருப்பதும் தெரிந்ததே.

## கடற் கரும் புலிகள்

கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் நினைவாக கடற்புலிகளின்

### கடல் விளையாட்டுப் போட்டி

காலம்: 4-5-1993 (செவ்வாய்க்கிழமை) காலை 6 மணி

நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நீச்சல் 200 | மீற்றர் | | — | ஆண்கள் |
| | 500 | ,, | | — | ,, |
| | 4 X 100 | ,, | அஞ்சல் | — | ,, |
| | 4 X 200 | ,, | ,, | — | ,, |
| | 50 | ,, | சுழி ஓட்டம் | — | ,, |
| | 100 | ,, | நீச்சல் | — | பெண்கள் |
| 2. | கட்டுமரம் வலித்தல் | — | மூங்கில் | (இருவர்) | |
| | கட்டுமரம் வலித்தல் | — | பலகை | (இருவர்) | |
| 3. | பந்து கடத்தும் போட்டி — (Water Polo) (7 பேர்) | | | | |
| 4. | தலையணைச் சண்டை | | | | |

## மண்ணெண்ணெய்

இதில் பொருளாதாரத் தடை முக்கியமானதொன்றாகும். எமது மக்களின் அத்தியாவசியப் பொருள்களில்மண்ணெண்ணெயும் ஒன்றாகும். விவசாயம், கல்வி வீட்டுப் பாவனை என்பவற்றிற்கு மண்ணெண்ணெயைப் பெரிதும் பாவிக்கின்றனர். ஆனால் சிங்கள அரசின் திட்டமிட்ட நடவடிக்கையால் எமது மக்களுக்கு மிகச் சிறிய அளவு மண்ணெண்ணெயே கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. அவற்றை அதிகளவு விலை கொடுத்தே எமது மக்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கட்டான இச் சூழ் நிலை

## வீரவணக்கக் கூட்டம்

சங்கானை வட்டப் பிரதேசத்தில் நாலாம் மாதத்தில் வீரச்சாவெய்திய மாவீரரை நினைவு கூரும் முகமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் நினைவஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட உள்ளது.

மேற்படி கூட்டம் இன்று இரவு 7.30மணியளவில் வட்டுபிளவத்தை கற்பகப் பிள்ளையார் கோவிலடி முன்றலில் நடைபெறவுள்ளதென சங்கானை வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களும், மற்றும் பலரும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். அத்தோடு விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (41)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

பாடசாலை மாணவர் உணவு முத்திரை விநியோகம், அப்பியாசக்கொப்பி விநியோகம், பாடசாலைகளின் அசையும், அசையாச் சொத்துக்கள் விபரம், மேதினம் சம்பந்தமாகவும் அதிபர்களுடன் கலந்துரையாடவிருப்பதால் நாளை புதன்கிழமை மு. ப. 10 மணிக்கு வேலணைக் கல்விக்கோட்ட அதிபர்கள் வேலணைக் கல்விக் கோட்ட அலுவலகத்திற்கும், நாளை புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு மருதனாமடக் கல்விக்கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் யாழ். இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறவிருப்பதால் சகல பாடசாலை அதிபர்களும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## உற்பத்தி எழுச்சிவாரப் போட்டி

உற்பத்தி எழுச்சிவாரத்தை முன்னிட்டு வட்ட தெரிவுப் போட்டிகளுக்கான இறுதிக் கட்ட போட்டிகள் இன்று காலை 9-30 மணியளவில் ஊரெழு அம்மன் கோயில் முன்றலில் நடைபெறும்.

துலா, பட்டை மூலம் நீர் இறைத்தல், தோட்டம் கொத்துதல், பனை மரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல், உணவுப் பண்டங்கள் தயாரித்தல் போன்ற போட்டிகள் யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும்.

# லலித்திற்கு அஞ்சலிசெலுத்த 3 மைல் நீளமான வரிசை

[கொழும்பு]

லலித் அத்துலத்முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கூடியுள்ள மக்களின் வரிசை மூன்று மைலுக்கும் மேலாக நீண்டிருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன. கடும் வெயிலுக்கு மத்தியிலும் அழுத கண்ணீரோடும், கோபாவேசத்துடனும் மக்கள் காணப்படுவதாகவும் தெரியவருகிறது.

கொழும்பு நகரமெங்கும் வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்டிருப்பதுடன், வீட்டுக்கு வெளியே ஒலிபரப்பிகளிலிருந்து லலித்தின் பேச்சுகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. கட்சித் தொண்டர்களே பல்வேறு வகையான இறுதிச் சடங்கு ஏற்பாடுகளையும் கவனித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை லலித் அத்துலத்முதலியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக புதன்கிழமை நண்பகல் 12-00 மணியுடன் கடமை புரியும் நிறுவனங்களிலிருந்து வெளியேறுமாறு 29 தொழிற் சங்கங்களின் சம்மேளனம் கேட்டுள்ளது.

## அஞ்சலி செலுத்தச் சென்ற 35 பேர் விபத்தில் பலி

(கொழும்பு)

களுத்துறையில் அழுத்கம - பலவத்த வீதியில் சென்ற பஸ் வண்டி ஒன்று நேற்றுக்காலை குடைசாய்ந்து ஆற்றினுள் வீழ்ந்ததில் 35 பயணிகள் பலியாகினர். பலியானோர் தொகை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது. ஆற்றில் மீட்புப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் 40 பயணிகள் இருந்தனர். நேற்றுக்காலை7.50 மணியளவில் இவ்விபத்து இடம் பெற்றதாகவும் விபத்துநடந்த போது பஸ் பாலம் ஒன்றின் மீதாக சென்றுகொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

## வாகன விபத்தொன்றில் ஐ. ஐ. தே. மு. வேட்பாளர் பலி

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மாத்தளை மாவட்ட வேட்பாளரும், பிரபல நடிகையுமான குமாரி செனிவிரட்ன வாகன விபத்தில் பலியானார். இவருடன் கூடச்சென்ற வேறு ஐவரும் இவ் விபத்தில் பலியாகினர்.

கொழும்பில் கொலை செய்யப்பட்ட லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு திரும்பிக்கொண்டிருந்த இவர்களது வாகனம் அலாவ பாலமருகே மகாஓயா ஆற்றினுள் வீழ்ந்ததில் இவர்கள் அனைவரும் பலியாகினர்

நேற்று முன்தினம் அதிகாலை இவ்விபத்து இடம் பெற்றது.

## மாணவர் உணவு முத்திரை

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்க கிளைகளில் 1992ஆம் ஆண்டின் செப்ரெம்பர், ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான மாணவர் மதிய உணவு முத்திரைக்கான பொருள்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் வியாழக் கிழமைக்கு முன்பாக பெற்றுக் கொள்ளும்படி சங்கப் பொது முகாமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஈ. பி. டி. பி. குழுவினரை கொழும்பிலிருந்து அகற்றுக

எதிர்க்கட்சிகள் கோரிக்கை

தென்பகுதியில் மக்கள் வாழும் பகுதிகளில் தங்கியிருக்கும் ஆயுதம் தாங்கிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரை உடனடியாக மேற்படி பகுதிகளில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் எதிர்க் கட்சிகள் கூட்டாக அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஆயுதம் தாங்கிய மேற்படி குழுவினர் ஜனாதிபதியின் தனிப்பட்டஇராணுவ அமைப்பாக செயல்படுவதாகவும் இக்குழுவினர் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கும் பிரேமதாசாவை எதிர்ப்பவர்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. இக்குழுவினரை வடக்கு கிழக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

## லலித்தின் உருவப்படங்களை ஆயுதக்கும்பல் அகற்றியது

லலித் அத்துலத் முதலியின் உருவப்படங்கள், சுவரொட்டிகள், பதாகைகள் என்பன சிவில் உடையணிந்த ஆயுதக் கும்பல்களினால் அகற்றப்படுவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

நகர, கிராமப்புறங்களில் ஒட்டப்பட்டிருக்கும் லலித்திற்கு அஞ்சலிசெலுத்தும் இச் சுவரொட்டிகள் அகற்றப்படுவதால் மக்கள் ஆத்திரமடைந்து வன்செயல்களில் ஈடுபடக்கூடும் என அக்கட்சி எச்சரிக்கை செய்துள்ளது.

## தற்பாதுகாப்பிற்கு ஆயுதம் 8 எதிர்க்கட்சிகள் கோரிக்கை

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் எல்லா எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கும் தற்பாதுகாப்பிற்கு ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் என எட்டு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அரசாங்க ஆதரவுக்குழுவான ஈ. பி. டி. பி. ஆயுதங்களை வைத்திருப்பதை அடுத்

பொலிஸ்

யத்துவம் கொடுத்து வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவை கோரியுள்ளன.

அத்துடன் லலித் கொலைச் சம்பவத்திற்கு பின் பாதுகாப்பு நிலைமையில் ஏற்பட்

## வேட்பாளர் பட்டியலில்

நினைவாக கடற்புலிகளின்

## கடல்
## விளையாட்டுப் போட்டி

காலம்: 4-5-1993 (செவ்வாய்க்கிழமை)

காலை 6 மணி

### நிகழ்ச்சிகள்

1. நீச்சல் 200 மீற்றர் — ஆண்கள்
   500 ,, — ,,
   4 X 100 ,, அஞ்சல் — ,,
   4 X 200 ,, ,, — ,,
   50 ,, சுழி ஓட்டம் — ,,
   100 ,, நீச்சல் — பெண்கள்
2. கட்டுமரம் வலித்தல் — மூங்கில் (இருவர்)
   கட்டுமரம் வலித்தல் — பலகை (இருவர்)
3. பந்து கடத்தும் போட்டி — (Water Polo) (7 பேர்)
4. தலையணைச் சண்டை
5. மல்யுத்தத்துடன் இணைந்த குத்துச்சண்டை (மூன்று பிரிவுகளாக
6. கயிறு இழுத்தல் — ஆண்கள் (7 பேர்)
   ,, — பெண்கள் (7 பேர்)
7. சங்கீதக் கதிரை — பெண்கள்


விண்ணப்பம் முடிவு திகதி 2-5-1993

தொடர்பு முகவரி:

ரஞ்சன் பூங்கா, மாவீரர் பொது நூலகம்
1-ம் கட்டை, பருத்தித்துறை.

குறிப்பு: கடலில் காவியம் படைத்த கடற் கரும்புலிகளான கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோரின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட கடற்புலிகளின் விசைப்படகுகளின் வெள்ளோட்டம் 4-5-1993 பிற்பகல் நடைபெறும்.

(4772)


Tastyயின் முதலாவது வெற்றுப்போத்தல் குலுக்கலுக்கு ஓரிரு நாட்களே உள்ளன.

இன்றே விரையுங்கள்

முதலாவது குலுக்கலுக்கு
இறுதித் திகதி 28. 04. 93

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி/6509)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கூடுவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டு இருப்பதும் தெரிந்ததே.

---

மண்ணெண்ணெய்

இதில் பொருளாதாரத் தடை முக்கியமானதொன்றாகும். எமது மக்களின் அத்தியாவசியப் பொருள்களில்மண்ணெண்ணெயும் ஒன்றாகும். விவசாயம், கல்வி வீட்டுப் பாவனை என்பவற்றிற்கு மண்ணெண்ணெயைப் பெரிதும் பாவிக்கின்றனர். ஆனால் சிங்கள அரசின் திட்டமிட்ட நடவடிக்கையால் எமது மக்களுக்கு மிகச் சிறிய அளவு மண்ணெண்ணெயே கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. அவற்றை அதிகளவு விலை கொடுத்தே எமது மக்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கட்டான இச் சூழ் நிலையைப் பாவித்து சில மண்ணெண்ணெய் வர்த்தகர்கள் மண்ணெண்ணெயில் கலப்படம் செய்து விற்பனை செய்வதாக பொதுமக்கள் பலர் எமது காவல் பணிமனைகளில் புகார் செய்த வண்ணம் உள்ளனர். ஆகவே எமது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இவ்வாறான மக்கள் விரோத செயல்களில் ஈடுபட வேண்டாமென சம்பந்தப்பட்ட வர்த்தகர்களை கேட்டுக் கொள்கின்றேன் எமது வேண்டுகோளை மீறி செயற்படுவோர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

டுள்ளனர்.

## உற்பத்தி
### எழுச்சிவாரப் போட்டி

உற்பத்தி எழுச்சிவாரத்தை முன்னிட்டு வட்ட தெரிவுப் போட்டிகளுக்கான இறுதிக் கட்ட போட்டிகள் இன்று காலை 9-30 மணியளவில் ஊரெழு அம்மன் கோயில் முன்றலில் நடைபெறும்.

துலா, பட்டை மூலம் நீர் இறைத்தல், தோட்டம் கொத்துதல், பனை மரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல், உணவுப் பண்டங்கள் தயாரித்தல் போன்ற போட்டிகள் யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும்.

## வேட்பாளர் பட்டியலில் லலித்தின் பெயர் நீக்கம்

(கொழும்பு)

மேல்மாகாணசபை தேர்தலில் கொழும்பு மாவட்டத்திற்கான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் பட்டியலில் முதலாவதாக இருந்த வேட்பாளரான லலித் அத்துலத்முதலியின் பெயர் வாக்குச் சீட்டில் செல்லுபடியற்றதாக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடைடய பேசிய அவர், எனினும்விரும்பியவர்கள் செல்லுபடியற்றதாக்கப்பட்ட லலித்தின் பெயருக்கான இலக்கத்திற்கு வாக்களிக்கலாம் என்று கூறினார். விருப்பு வாக்குகள் எண்ணப்படமாட்டாது லலித்தின் பெயரில் கட்சிக்கு அளிக்கப்படும் வாக்குகள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார்.

மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்கும்படி இதுவரை எவரும் கோரவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாகனம் அலாவ பாலமருகே மகாஓயா ஆற்றினுள் வீழ்ந்தகும் ஆயுதம் தாங்கிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரை

## லலித்தின் உருவப்படங்களை ஆயுதக்கும்பல் அகற்றியது

லலித் அத்துலத் முதலியின் உருவப்படங்கள், சுவரொட்டிகள், பதாகைகள் என்பன சிவில் உடையணிந்த ஆயுதக் கும்பல்களினால் அகற்றப்படுவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

நகர, கிராமப்புறங்களில் ஒட்டப்பட்டிருக்கும் லலித்திற்கு அஞ்சலிசெலுத்தும் இச் சுவரொட்டிகள் அகற்றப்படுவதால் மக்கள் ஆத்திரமடைந்து வன்செயல்களில் ஈடுபடக்கூடும் என அக்கட்சி எச்சரிக்கை செய்துள்ளது.

## தற்பாதுகாப்பிற்கு ஆயுதம் 8 எதிர்க்கட்சிகள் கோரிக்கை

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் எல்லா எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கும் தற்பாதுகாப்பிற்கு ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் என எட்டு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அரசாங்க ஆதரவுக்குழுவான ஈ. பி. டி. பி. ஆயுதங்களை வைத்திருப்பதை அடுத்தும் தேர்தல் பிரசார காலத்தில் எல்லாக் கட்சிகளிடமிருந்தும் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கைக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க மறுப்புத் தெரிவித்ததையடுத்தும் இக்கோரிக்கையை தாம் முன் வைத்துள்ளதாக எதிர்க்கட்சிகள் செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

ஈ. பி டி. பி யினரிடமிருந்து ஆயுதங்களைக் களைவதில் அரசாங்கம் தயக்கம் காட்டுவதையிட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் டி சில்வா கவலை தெரிவித்தார்.

வேண்டும் என்றும் எதிரக் கட்சிகள் கூட்டாக அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன,

ஆயுதம் தாங்கிய மேற்படி குழுவினர் ஜனாதிபதியின் தனிப்பட்டஇராணுவ அமைப்பாக செயல்படுவதாகவும் இக்குழுவினர் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கும் பிரேமதாசாவை எதிர்ப்பவர்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. இக்குழுவினரை வடக்கு கிழக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

---

பொலிஸ்

யத்துவம் கொடுத்து வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவை கோரியுள்ளன.

அத்துடன் லலித் கொலைச் சம்பவத்திற்கு பின் பாதுகாப்பு நிலைமையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தினால் மாகாணத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் ஆயுதங்கள் வழங்கும் படியும், ஏழு கட்சிக் கூட்டணியின் தலைவர் திருமதி சிறிமாவோ கூறியுள்ளார்.


---

ஸ்கொட்

ம்பு வந்துசேர்ந்தனர்.

கடந்த வெள்ளி இரவு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலி கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் முகமாகவே இவர்கள் கொழும்பு வந்தனர் என்பது தெரிந்ததே.

## 7-ம் ஆண்டு நினைவலைகள்




கடற்புலி

**லெப். தெய்வா**

(ஐயாத்துரை சிவநதன்)

| தமிழீழ மண்ணில் | தமிழீழப் போரில் |
|---|---|
| 18-10-1964 | 27-04-1986 |

## 8-ம் மாத நினைவலைகள்



சிறப்புப்படைப் பிரிவின் சிறப்புத் தளபதி

**லெப். கேணல் ராஜன்**

(சோமசுந்தரம் சற்குணம்)

| தமிழீழ மண்ணில் | தமிழீழப் போரில் |
|---|---|
| 14-02-1966 | 27-08-1992 |

தமிழ் அன்னை ஈன்றெடுத்த மானப் புதல்வரே
தமிழ்த்தாய் விலங்கொடிக்க வீறுகொண்டெழுந்த மறவர்களே
தமிழீழம் மீட்கும் போரில் இன்னுயிரை உவந்தளித்த மாவீரரே
மலரும் தமிழீழத்தில் உங்கள் வரலாறு மாணிக்கக் கல்வெட்டு ஆகட்டும்.

இவர்களுடன் வீரச்சாவை அணைத்துக்கொண்ட மாவீரர்களுக்கும்
வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

மாதகல்துறை, மாதகல். (4775) தெய்வா படிப்பகம்

## மரண அறிவித்தல்
### இராயப்பு குருசுமுத்து

நவாலியூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இராயப்பு குருசுமுத்து என்பவரின் பூதவுடல் 27- 04- 93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3. 00 மணியளவில் நவாலி சென். பீற்றேஸ் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய். [4773]

தகவல்:
தவம் குருசுமுத்து

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 26-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9191

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-0733, 41-8557, 27-7717, 42-3329, 26-6775, 40-1188, 26-4510, 28-2429, 26-4885, 26-7307, 28-6640, 27-5799, 26-4809, 26-3412.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-7312, 26-3118, 26-6842, 41-9997, 27-4019, 24-5416, 24-6475, 26 3518, 27-0089, 27-5670, 28 1928, 26-1745, 42-3732, 24-7672, 24-0521, 24-9175, 26-6335, 28-9186, 26-9703, 24-5703, 26-0355, 28-1677.